# AL-HUDHA HAJ SERVICE (P) LTD.

Chennai

1

## தல்பிய்யா

لَبَّيْكَ اَللّٰهُمَّ لَبَّيْكَ    لَبَّيْكَ لاَ شَرِيْكَ لَكَ لَبَّيْكَ
إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لاَ شَرِيْكَ لَكَ.

லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்
லப்பைக லாஷரீக்க லக்க லப்பைக்
இன்னல் ஹம்த வந்நிஃமத்த
லக்க வல் முல்க் லா ஷரீக்க லக்.

## தல்பிய்யா பொருள்:

இதோ உன்னிடமே வந்துவிட்டேன்! அல்லாஹ்வே! இதோ உன்னிடமே வந்துவிட்டேன். உனக்கு எந்த இணையுமில்லை இதோ உன்னிடமே வந்துவிட்டேன். நிச்சயமாக அனைத்துப் புகழும், அருட் கொடைகளும் அரசாட்சியும் உனக்கே உரியவை. உனக்கு இணையாருமில்லை.

(நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

3

## தவாஃபில் கூற வேண்டியவை
## (ருக்னுல் யமானிலிருந்து ஹஜ்ருல் அஸ்வத் வரை )

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹசனத்தன்
வஃபில் ஆகிரத்தி ஹசனத்தன் வகினா அதாபன்னார்.

பொருள்:

அல்லாஹ்வே! எங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் அழகானவற்றைத் தருவாயாக! மேலும் நரக வேதனையைவிட்டு எங்களைக் காப்பாற்றுவாயாக!

(அல்குர்ஆன்: 2: 201)

إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِن شَعَائِرِ اللَّهِ ۖ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ
اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَن يَطَّوَّفَ بِهِمَا ۚ وَمَن تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللَّهَ شَاكِرٌ عَلِيمٌ

இன்னஸ் ஸஃபா வல்மர்வத்த மின் ஷஆயிரில்லாஹ். ஃபமன் ஹஜ்ஜல் பைத்த அவிஃதமர ஃபலா ஜுனாஹ அலைஹி அ(ன்)ய்யத்தவ்வஃப பிஹிமா. வமன் ததவ்வஅ கைரன் ஃபஇன்னல்லாஹ ஷாகிருன் அலீம்.

பொருள்: நிச்சயமாக ஸஃபா மற்றும் மர்வா அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களில் உள்ளனவாகும். எனவே எவர் (கஃபா என்னும்) அவ்வீட்டை ஹஜ் அல்லது உம்ரா செய்கின்றார்களோ அவர்கள் அவ்விரண்டையும் சுற்றி வருதல் குற்றமில்லை. யார் விரும்பி நன்மை செய்கின்றாரோ (அவருக்கு) அல்லாஹ் நன்றி பாராட்டக்கூடியவனும் நன்கறிந்தவனும் ஆவான். *(2:158)*

# ஸஃபா மர்வாவில் கூறவேண்டிய துஆ

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ. لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ أَنْجَزَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ.

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து. வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு அன்ஜஸ வஃதஹு வநஸரஅப்தஹு வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹு.

பொருள்:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதோர் இணையுமில்லை. அரசாட்சி அனைத்தும் அவனுக்கே உரியது. எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றல் பெற்றவன். அவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை. அவனே தன்னுடைய அடியாருக்கு உதவி செய்து தன் வாக்குறுதியை நிறைவேற்றினான்; அவன் தனித்தவனாக இருந்து எதிரிப்படைகளைத் தோற்கடித்தான் (நூல்: முஸ்லிம்)

## அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான வார்த்தைகள் நான்காகும்

سُبْحَانَ اللهِ وَ الْحَمْدُ لِلّٰهِ وَ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَ اللهُ اَكْبَرُ

சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹுˉ வல்லாஹுˉஅக்பர்.

(நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் சுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி (அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்) என்று யார் ஒரு நாளில் நூறு முறை சொல்வாரோ அவரின் தவறுகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. அவை கடலின் நுரை போன்று இருந்தாலும் சரியே! என அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார்கள்.

(நூல் : புகாரீ)

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ.

இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்: லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல், முல்க்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர் என்று ஒரு நாளில் நூறு முறை சொல்கிறவருக்கு அது பத்து அடிமைகளை விடுதலை செய்வதற்குச் சமமான நன்மையை பெற்றுத்தரும் மேலும் அவருக்கு நூறு நன்மைகள் எழுதப்படும்;

அவரின் கணக்கிலிருந்து (அவர் புரிந்த) நூறு தீமைகள் அழிக்கப்படும்; மேலும் அந்த நாளில் மாலை நேரம் வரை ஷைத்தானிடமிருந்து (பாதுகாக்கும்) அரணாக அது அவருக்கு அமையும் மேலும் அவர் புரிந்த சிறந்த நற்செயலை எவரும் செய்ய முடியாது. ஒருவர் இதைவிட அதிகமாக நற்செயல் புரிந்தாலே தவிர என அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார்.

(நூல் : புகாரீ)

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ۔

“சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம்” என்ற வார்த்தை நாவுக்கு இலகுவானவை; தராசில் அதிகக் கனத்தைப் பெற்றுத்தருபவை; கருணையாலனுக்குப் பிரியமானவை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

# மஸ்ஜிதில் நுழையும் போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ افْتَحْ لِيْ أَبْوَابَ رَحْمَتِكَ

அல்லாஹும் மஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக

பொருள் :

இறைவா! உன் கருணையின் வாயில்களை எனக்குத் திறப்பாயாக!

நபி(ஸல்) அவர்கள்; அப்துல்லாஹ் பின் கைஸே! சுவனத்தினுடைய பொக்கிஷங்களிலிருந்து ஒரு பொக்கிஷத்தைப் பற்றி உமக்கு நான் அறிவித்துத் தரவா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆம் என்று நான் கூறினேன். அதற்கவர்கள்,

لآ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللّٰهِ

லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹி என்று கூறுவீராக! எனக் கூறினார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

## 16 ஜனாஸாவில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اغْفِرْ لَهُ وَارْحَمْهُ وَعَافِهِ وَاعْفُ عَنْهُ وَأَكْرِمْ نُزُلَهُ وَوَسِّعْ مُدْخَلَهُ وَاغْسِلْهُ
بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرْدِ وَنَقِّهِ مِنَ الْخَطَايَا كَمَا نَقَّيْتَ الثَّوْبَ الْأَبْيَضَ مِنَ الدَّنَسِ
وَأَبْدِلْهُ دَاراً خَيْراً مِنْ دَارِهِ وَأَهْلاً خَيْراً مِنْ أَهْلِهِ وَزَوْجاً خَيْراً مِنْ زَوْجِهِ
وَأَدْخِلِ الْجَنَّةَ وَأَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِ أَوْ مِنْ عَذَابِ النَّارِ.

அல்லாஹும்மஃபிர் லஹு வர்ஹம்ஹு வ ஆஃபிஹி வஃபு அன்ஹு வஅக்ரிம் நுஸுலஹு வவஸ்ஸிஃ முத்கலஹு வஹ்சில்ஹு பில்மாஇ வஸ்ஸல்ஜி வல்பர்தி வநக்கிஹி மினல் ஃகதாயா கமா நக்கைத்த ஸ்ஸவ்பல் அப்யள மினத்தனஸி வஅப்தில்ஹு தாரன் கைரன் மின் தாரிஹி வஅஹ்லன் கைரன் மின் அஹ்லிஹி வசவ்ஜன் கைரன் மின் சவ்ஜிஹி வஅத்கில்ஹுல் ஜன்னத வஅயித்ஹு மின் அதாபில் கப்ரி அவ் மின் அதாபின்நார்.

பொருள் :

இறைவா! இவரை மன்னிப்பாயாக! அருள் புரிவாயாக! தவறுகளை அலட்சியப் படுத்துவாயாக! தங்குமிடத்தை மதிப்புமிக்கதாக ஆக்குவாயாக! நுழையும் இடத்தை விசாலமாக்குவாயாக! இவரைத் தண்ணீராலும், பனிக்கட்டியாலும், ஆலங்கட்டியாலும் கழுவுவாயாக! வெண்மையான ஆடையை அழுக்கிலிருந்து சுத்தம் செய்வதைப் போல் இவரைக்குற்றத்திலிருந்து சுத்தம் செய்வாயாக! இங்கிருந்த வீட்டைவிடச் சிறந்த வீட்டையும், இங்கிருந்த குடும்பத்தைவிடச் சிறந்த குடும்பத்தையும், இங்கிருந்த வாழ்க்கைத் துணையைவிடச் சிறந்த துணையையும் வழங்குவாயாக! இவரைக் கப்ரின் வேதனையிலிருந்து காப்பாயாக! அல்லது நரக நெருப்பிலிருந்து காப்பாயாக!

2/ 117, Armenian Street, 2nd Floor, Mannady, Chennai-600 001.
Phone: +91-44- 42130338, 42130339, Fax: +91-44-42162595
Mobile :+91- 99626 44000, 94431 03500, 99408 11119 (KSA) +966-553932797
Email: alhudhahaj@gmail.com Web: www.alhudha.com